முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.197/2022**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.09.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.09.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | துளசிசெல்வி | வயது.. | 57 |
| கணவர் பெயர்.. | கல்யாணசுந்தரம் | கிராமம்.. | தெற்குதிட்டை |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எப்போது எனக்கு திருமணம் ஆனது என்றால் சுமார் 34 வருடங்களுக்கு முன்பு. என் கணவர் திருமணத்திற்கு முன்பு எனக்கு உறவா அல்லது அசலா என்றால் அசல் தான். நானும் என் கணவரும் எங்கு வசித்து வந்தோம் என்றால் புவனகிரியில் தான். எங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகள், 1 மகன் விஷ்ணு பீர்த்தி, ஹரி ஸ்ருதி, ஸ்ரீஹரி ராஜேஷ். கலியபெருமாள் யார் என்றால் என் தகப்பனார். கலியபெருமாள் எப்போது இறந்தார் எனறால் சுமார் 3 வருடத்திற்கு முன்பு. கலியபெருமாள் மனைவியான என் தாயார் எப்போது இறந்தார் என்றால் 6 வருடங்களுக்கு முன்பு. கலியபெருமாள் வசந்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான் மற்றும் வேல்முருகன். என் தகப்பனார் என்ன வேலையில் இருந்தார் என்றால் வட்டார வளர்ச்சி அலுவலராக இருந்தார் கடைசியாக எங்கு பணியில் இருந்தார் என்றால் கீரப்பாளையம். மாரியம்மாள் யார் என்றால் என் தகப்பனாரின் இரண்டாம் மனைவி.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மாரியம்மாள் எனது தகப்பனாரின் வைப்பு மனைவி என்று சொல்லிய நிலையில் அதற்கான அர்த்தம் என்னவென்றால் எனது தாயார் பணியில் இருந்த காரணமாக என் தகப்பனார் மாரியம்மாள் வீட்டிற்கு தான் செல்வார். என் தகப்பனார் இறக்கும்போது என் தாயார் உயிருடன் இல்லை. 3,4 பிரதிவாதிகள் யார் என்றால் எனது தகப்பனார் மற்றும் மாரியம்மாளுக்கு பிறந்த பிள்ளைகள். மாரியம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. வாரிசு சான்றிதழ் வேண்டி வட்டாட்சியரிடமோ, ஆட்சியரிடமோ மனுக்கொடுத்தேனா என்றால் இரண்டாம் வாதி தான்

கொடுத்தார். எனது தகப்பனாருக்கு இறுதி சடங்குகள் யார் செய்தார்கள் என்றால் 2 ம் வாதியும், 4 ம் பிரதிவாதியும். இறக்கும் சமயத்தில் கலியபெருமாள் எங்கு இருந்தார் என்றால் என் வீட்டில் தான் இருந்தார். செந்தில்முருகன் என் தகப்பனாருக்கு பிறந்த குழந்தை தான் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எதற்காக இந்த செந்தில்முருகனை தரப்பினராக சேர்த்தேன் என்றால் மற்ற உறவினர்கள் சொல்லி சேர்த்துள்ளேன்.

3. இறந்த வசந்தாவின் பணபயன்கள் மட்டும் எனக்கு கிடைத்தால் போதும் என்றால் சரிதான். என் தாயார் என்ன பணியில் இருந்தார் என்றால் ஆசிரியர். வசந்தாவிற்கு நான் தான் மகள் என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதும் தாக்கல் செய்துள்ளேன். 3,4 பிரதிவாதிகள் கலியபெருமாளின் வாரிசுகள் என்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். இறந்த கலியபெருமாளுக்கு 3,4 பிரதிவாதிகள் மட்டும் தான வாரிசு தாரர்களாக இருக்க முடியும் என்றாலும் மாரியம்மாள் கலியபெருமாளின் வாரிசு இல்லை என்றாலும் சரிதான். கலியபெருமாள் மீது சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கலியபெருமாள் பெயரில் உள்ள சொத்துக்களை மாற்றவும் மின் இணைப்பு பெறவும் சான்றிதழ் தேவைபடுவதாக சொல்லிய நிலையில் அந்த சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. இறந்த கலியபெருமாளின் வாரிசுகள் தான் 3,4 பிரதிவாதிகள் என நிரூபிக்கம் பட்சத்தில் இந்து வாரிச உரிமை சட்டத்தின் படி அவர்களும் கலியபெருமாளின் வாரிசுகளாக உரிமை பெற தகுதியுடையவர்கள் என்றால் சரிதான்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை :**

**-இல்லை-**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.